# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

**අංක 2487/ 07 - 2026 මැයි මස 05 වැනි අඟහරුවාදා - 2026.05.05**

2487/07 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை

2026 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல.: 13/ 99/ FR/107
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: ල/ඉඩම්/3/3/5/17/1

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க்காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தி யோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2026, மாச்சு 19.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், லக்கல.

II.**காணியின் விபரம்**: மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவில், லக்கல உடசிய பற்று சிறு பிரிவில் எட்டன்வல கிராம அலுவலர் பிரிவில் எட்டன்வல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட பி.ஆ.வ 21, 2010.01.22 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் உள் வரைபட இல. 62 இல், தாள் இல. 15 இல் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

**1. துண்டு இல. 495 - கும்புருகொட்டுவ இடம - விஸ்தீரணம்: 0.1966 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 496; கிழக்கு: துண்டு இல. 496;தெற்கு: துண்டு இல. 496;மேற்கு: துண்டு இல. 496.

EOG 05-0003



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை

2026 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல.: 4-3/ 3/ 2021/VE/288
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DEV/LND/02/ACQUI/04-15

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க்காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தி யோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2026, மாச்சு 19.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், தெவிநுவர.

II. **காணியின் விபரம்** : தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில் இல.438, தலல்ல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் தலல்ல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2025.05.27 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இல. MR/DVN/2025/152 இல் குறிப்பிடப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லை:

**01. துண்டு “A” - ஆரஹேன் - விஸ்தீரணம் : 0.0455 ஹெக்டயார்**

வடக்கு: வடக்கு நாணாயக்கார ஹேவா வெல்லாலகே ஜநோஹாமி உரிமைகோரும் ஆரஹேன மற்றும் வீதி : கிழக்கு: வீதி மற்றும் கே.டி.ஏ. சமரசேன உரிமைகோரும் ஆரஹேன; தெற்கு: கே.டி.ஏ. சமரசேன உரிமைகோரும் ஆரஹேன மற்றும் அரசாங்கம் உரிமைகோரும் ஜுவான்கங்கானம்கேஹேன (ஆ.வ.மாற 2853 இல் துண்டு இல. 3) : மேற்கு; அரசாங்கம் உரிமைகோரும் ஜுவான்கங்கானம்கேஹேன (ஆ.வ. மாற 2853 இல் துண்டு இல. 3) மற்றும் நாணாயக்கார ஹேவா வெல்லாலகே ஜநோஹாமி உரிமைகோரும் ஆரஹேன)

EOG 05-0004

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை

2026 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல.: 4-3/14/ 2026/VE/08
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: KDS/PBK/4/4/4/60

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க்காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தி யோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2026, ஏப்பிறல் 28.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், பஸ்பாகே கோறளை.

II. **காணியின் விபரம்** : மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோறளை பிரதேச செலாளர் பிரிவில் இல. 1097, கந்தோபிட்டிய கிராம அலுவலர் பிரிவில், ஹயின்பொட் குடியேற்ற கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2026.04.20 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இல. MAHA/PSK/2026/197 இல் துண்டு “A” என குறிப்பிடப்பட்டுள்ள 6.0701 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட ஹயின் பொட்வத்தை எனும் காணியின் எல்லைகள் **:**

**01. துண்டு “A” - ஹயின்பொட்வத்தை - விஸ்தீரணம் : 6.0701 ஹெக்டயார்**

வடக்கு: வீதி மற்றும் ஆ.வ.மஹ 1843 இல் துண்டு இல. 02; கிழக்கு: உபி 44516 மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை), வீதி; தெற்கு: வீதி மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை), உபி. 44516; மேற்கு: ஆ.வ.மஹ 1843 இல் துண்டு இல. 02 மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

EOG 05-0001

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.